நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

15.07.2024

# முக்கிய தொழிலதிபருக்காக நடத்தப்பட்ட தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு

## உயர்நீதிமன்றம் கண்டனம்

**சென்னை, ஜூலை 15:** செல்வாக்குமிக்க ஒரு முக்கிய தொழிலதிபருக்காக தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு நடைபெற்றதாக சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மதுரையைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலரும் வழக்குரைஞருமான ஹென்றி திபேன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், என்.செந்தில் குமார் ஆகியோர் அமர்வு முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஹென்றி திபேன்,சிபிஐ அறிக்கை மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். இதற்கு, சிபிஐ தரப்பில் ஆஜரான சிறப்பு குற்றவியல் வழக்குரைஞர் கே.சீனிவாசன், கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அதற்கு நீதிபதிகள், 'இந்த வழக்கில் சிபிஐ நடுநிலையோடு விசாரணை நடத்தியுள்ளதா? இந்த துப்பாக்கிச்சூடு சம்பவமே நீண்ட நாள் திட்டமிட்டு நடந்துள்ளது. 100 நாள்கள் நடந்த போராட்டத்தில் ஏதாவது ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டதா? 100 நாள்கள் போராடியும் எந்த நடவடிக்கையும் இல்லை என்பதால்தான், 100-ஆவது நாள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**ஏன் துப்பாக்கிச்சூடு?:** ஆனால், போராடினால் இதுதான் நிலை என்று தகவல் தெரிவிப்பதுபோல, பொதுமக்களை புழு பூச்சி போல் நசுக்கி விடலாம் என்று நினைக்கின்றனர். ஆட்சியர் அலுவலகத்திலிருந்து சுமார் 7 கிமீ தூரத்தில் உள்ள திரேஸ் புரத்தில் ஏன் துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டும்? 144 தடை உத்தரவு அங்கு போடப்படவில்லை. சுதந்திரமான அமைப்பான சிபிஐ, ஒரே ஒரு அதிகாரி மீது குற்றம் சாட்டி இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பது, சிபிஐ-இன் கையாலாத்தனத்தைக் காட்டுகிறது.

சாத்தான்குளம் சம்பவத்தை சிபிஐ நேர்மையாக விசாரித்து, போலீஸாரை கைது செய்தது. நாங்கள் ஒட்டுமொத்த சிபிஐ-யையும் குறை கூறவில்லை. இந்த சம்பவத்தில், 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர். செல்வாக்குமிக்க ஒரு முக்கிய தொழிலதிபருக்காக இந்த சம்பவம் நடந்துள்ளது. சம்பவம் நடந்து 6 ஆண்டுகளாகியும், யார் மீதும் நடவடிக்கை இல்லை. இன்னும் 2, 3 ஆண்டுகள் ஆகி விட்டால், அப்படியே மறந்து போகும்' என்றனர்.

**எவ்வளவு சொத்து சேர்த்தனர்?:** பின்னர், 'இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் தொடர்புடைய காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும், இந்த சம்பவம் நடப்பதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பும், பின்பும் எவ்வளவு சொத்துகள் வாங்கியுள்ளனர் என்பது குறித்து விசாரித்து 2 வாரத்துக்குள் தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீஸார் அறிக்கை தாக்கல் செய்யவேண்டும்' என உத்தரவிட்டு விசாரணையை வரும் 29-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.